# S.C. 323 /2017

P.W.2 திரு.ராமராசு **05.02.2019**

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி:**

நான் மதுரை மத்திய நீர்வளத்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். நான் ஓய்வு பெற்ற நாளிலிருந்து திருமங்குலம் பேரையூர் தாலுகா, டி.கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்துவருகிறேன். எங்கள் ஊரிலிருந்து மதுரைக்கு வரவேண்டுமென்றால் பேரையூர் வழியாக திருமங்குலம் வந்து பெரியார் நிலையம் வரவேண்டுமென்றால் சரிதான். அதே போல் பேரையூரிலிருந்து உசிலம்பட்டி சென்று அங்கிருந்து மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையம் வரவேண்டுமென்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து மதுரைக்கு வர மேற்படி இரண்டு வழிகளில் எந்த வழியில் வந்தாலும் பேருந்தில் வர சுமார் 2 மணிநேரமாகும். எங்கள் ஊரிலிருந்து இரவு 9.00 மணிக்கு மேல் நேரடியாக மதுரைக்கு வருவதற்கு பேருந்து வசதி ஏதுமில்லை. மதுரைக்கு வந்தாலும் கூடல் புதூர் வருவதற்கு தனியாக பஸ்ஸோ ஆட்டோவோ பிடித்துதான் வரவேண்டுமென்றால் சரிதான். கூடல்புதூர் பாலம் இறங்கி கிழக்கே 2 கி.மீ தூரம் சென்றால் கூடல்புதூர் காவல் நிலையம் வரலாம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு நேர் பின்புறம் என் மகள் லாவண்யாவின் வீடு உள்ளது என்றால் சரிதான். என் மகள் வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் காவல் நிலையம் தாண்டிதான் செல்லவேண்டும். காவல் நிலையத்திலிருந்து சுமார் 100 அடி தூரத்தில் என் மகள் வீடு உள்ளது. சம்பவம் குறித்து எனக்கு தொலைபேசிவாயிலாக தகவல் கிடைத்தது. பெங்களூரில் வசிக்கும் என் மகள் மலர்விழி எனக்கு சம்பவம் குறித்து தகவல் சொன்னார். என் இன்னொரு மகள் நிர்மலா அவரது கணவர் குழந்தைகளுடன் பெங்களூரில் வசிக்கிறார் என்றால் சரிதான். எனது மகள் மலர்விழி தகவல் சொல்லும் வரை எனக்கு இந்த சம்பவம் குறித்து தெரியாது. சாட்சி கோவிந்தன், கணேசன், முத்துப்பாண்டி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் குறித்த தகவலை நான் சொல்லித்தான் அவர்களுக்கு தெரியும். சம்பவம் குறித்து தகவல் தெரிந்தவுடன் நான், கோவிந்தன், கணேசன், முத்துப்பாண்டி ஆகியோர் மதுரைக்கு வந்தோம். நான் மதுரைக்கு வந்தபோது எனது மருமகன் இறந்துபோன மணி அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளார் என்று தெரிந்துகொண்டேன். மதுரை வந்தவுடன் நான் அரசு மருத்துவமனை

சென்றேனா என்றால் இல்லை. 1ஆம் எதிரியாகிய என் மகளுக்கு சம்பவ சமயத்தில் சுமார் நான்கரை வயதில் ஒரு பெண் குழந்தை இருந்தது என்றால் சரிதான். மேற்படி பெண் குழந்தை தற்போது என்னிடம்தான் இருக்கிறது. சம்பவம் கேள்விப்பட்டு காவல் நிலையத்தில் வைத்து **28.02.2017ஆம் தேதியன்று** 1வது எதிரியை குழந்தையுடன் பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் மறுநாள் 01.03.2017ஆம் தேதி 1வது எதிரியுடன் எனது பேத்தியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். என் மகள் நிர்மலா அவரது கணவர் செல்வக்குமாருடன் சேர்ந்து பெங்களூரிலிருந்து மதுரைக்கு வந்தார். 2வது எதிரி ராஜேஸ் உடன் சேர்ந்து சம்பவம் நடந்த வீட்டிற்குள் நான் சென்றேனா என்றால் வீட்டிற்**குள்** செல்லவில்லை. வெளியில்தான் நின்றுகொண்டிருந்தேன். வெளியில் நின்று கொண்டிருந்த போது அங்கு பொதுமக்களும் போலிசாரும் நின்று கொண்டிருந்தார்கள். பேண்ட் சட்டை கத்தி (சா.பொ..1 முதல் 3) ஆகியவற்றை போலிசார் வீட்டிற்கு வெளியே வைத்து காண்பித்த போது பார்த்தேன். மேற்படி சா.பொருட்கள் குறித்து தனிப்பட்ட அடையாம் ஏதும் சொல்ல இயலாது என்றால் சரிதான். ஆலன்ஷோலி கம்பெனி சட்டைகள் பொதுவாக நிறைய இருக்கலாம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நீதித்துறை நடுவர் முன்பு சாட்சியமளிப்பதற்கு நான் போலிசாரிடம் தனிப்பட்ட முறையில் விண்ணப்பம் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் நான் நீதித்துறை நடுவர் முன்பு சாட்சியமளித்தேனாா என்றால் போலிசார் சாட்சியமளிக்க வரவேண்டுமென்று சொன்னதால் சாட்சியமளித்தேன். நான் நீதித்துறை நடுவர் முன்பு சாட்சியமளித்த போது சதீஸ்வரன் என்பவரை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எனக்கு முன்பாக நீதித்துறை நடுவரிடம் வி.ஏ.ஓ சாட்சியமளித்தார். என்னை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு போலிசார் அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வரச்சொன்னார்கள் நான் அங்கு சென்றேன். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வைத்து போலிசார் என்னை பார்த்தார். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என்ன கேட்கப்படும் என்ன சொல்ல வேண்டுமென போலிசார் சொல்லிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. அசாஆ.5ல் சா.பொருட்களை என் முன்னிலையில் மகசரில் 2வது எதிரி ஆஜர் படுத்தியதன் பேரில் கைப்பற்றப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல

சொன்னேன். 1வது எதிரிக்கு இறந்து போன மணியை திருமணம் செய்வதற்கு முன்பாக இரண்டு முறை திருமணம் செய்யப்பட்டு அந்த இரண்டு திருமணமும் பொதுவில் பேசி இரு குடும்பத்தாரும் சம்மதித்து நீதிமன்றம் செல்லாமல் விவாகரத்து செய்துகொண்டோம். மேற்படி இரண்டு பேச்சு வார்த்தை நடந்த சமயத்திலும் நான் என் மனைவி மற்றும் என் உறவினர்கள் தான் சென்றோம். பெங்களுரில் வசிக்கும் என் மகள்கள் கலந்துகொள்ளவில்லை. மேற்படி இரண்டு பேச்சு வார்த்தை சமயத்திலோ அல்லது மேற்படி இரண்டு திருமணத்திற்கோ இறந்து போன மணி மற்றும் அவரது குடும்பத்தார் வரவில்லை என்றால் சரிதான். மணி மற்றும் அவரது குடும்பத்தார் வராததற்கு தனிப்பட்ட காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. 1வது எதிரி லாவண்யா இறந்து போன மணியை விரும்பித்தான் திருமணம் செய்தார். எனது மகள் லாவண்யா இறந்த மணியை திருமணம் செய்வதற்கு முன்பாக இரண்டு முறை திருமணம் செய்த காலக்கட்டங்களிலும் இறந்து போன மணியும் லாவண்யாவும் தொடர்ந்து காதலித்து வந்தார்கள் என்றும் அதனால்தான் மேற்படி மணியும் அவரது குடும்பத்தாரும் லாவண்யாவின் முதல் இரண்டு திருமணம் மற்றும் விவாகரத்து பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன மணிக்கு லாவண்யாவை திருமணம் செய்து வைத்தது மலர்விழிக்கு ஆரம்பத்தில் பிடிக்காமல் இருந்தது. எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மேற்படி லாவண்யா மணி திருமணத்தில் ஆரம்பத்தில் விருப்பம் இல்லாமல் இருந்தது. லாவண்யாவும் மணியும் திருமணம் செய்தது சம்பந்தமாக எங்களுக்கு விருப்பமில்லாமல் இருந்த காரணத்தால் எங்கள் குடும்பதார் அனைவரும் லாவண்யாவோடு வெறுப்பு கொண்டு பேச்சு வார்த்தையில்லாமல் இருந்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரம் விதத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் 2வது எதிரியை காவல் நிலையத்தில் வைத்து சந்திக்கவில்லை என்றும் 2வது எதிரி என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதனடிப்படையில் எந்தவொரு சா.பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் நானும் எனது மகள் மலர்விழி, உறவினர்களுடன் தகவல் கிடைத்து அரசு மருத்துவமனைக்கு நேராக சென்றோம் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை கேள்விப்பட்டு தனியாக டாட்டோசுமோ வண்டி ஏற்பாடு செய்து எனது ஊரிலிருந்து மதுரைக்கு வந்தேன். மேற்படி டாட்டோசுமோ டிரைவர் தற்போது

எங்கள் ஊரில் வசிக்கிறார். போலிசார் டாட்டோ சுமோ டிரைவரை விசாரிக்கவில்லை. என் மகள் லாவண்யா மீது கொண்டுள்ள விரோதம் காரணமாக இந்த வழக்கிற்கு சாட்சி வேண்டும் என்ற காரணத்தால் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் சொல்லிக்கொடுத்தது போல நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. இறந்து போன மணிக்கு வியாபார ரீதியாகவும் வேறு வகையிலும் எதிரிகள் இருந்தார்கள் என்றும் அவர்கள் மூலமாகத்தான் மணியின் இறப்பு ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

(1வது எதிரி தரப்பில் கு.வி: மேற்படி கு.வி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)